IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 63 /2010
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : புனிதா | Caste | : - |
| Husband's Name | : முத்தப்பன் | Calling | : - |
| Village | : பெங்களூர் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 15 day of July, 2019.

Cross Examination (பிரதிவாதி தரப்பில் )

நிரூபணவாக்குமூலம் எனது தரப்பில் நான் தான் தாக்கல் செய்தேன். நிரூபணவாக்குமுலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். வாதி அழைத்ததின் பேரில் நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தை எனது கணவர் விற்றுவிட்டதால் எனது மாமனார் ஆகிய வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் வாதியாகிய மானாரின் முதல் மகன் என்றால் சரிதான். பிரதிவாதி எனத தூரத்து உறவு முறை என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் என்ன உறவு முறை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது கணவர் விற்றபோது நான் எனது கணவருடன் பதிவு அலுவலகத்திற்கு வந்தேன் என்றால் வந்தேன் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். நான் தமிழ்நாட்டில் 8ம் வகுப்பு தமிழ் வழியில் தான் படித்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு என்னபரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் விவசாயம் செய்வதற்காக தாவா சொத்தை வாதி சென்றுபார்த்தபோது பிரதிவாதி தாவா சொத்தை வாதியின் மகன்

விற்றுவிட்டதாக சொல்லி தகராறு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சாட்சி கூறுகிறார். 2010-ம் ஆண்டு இந்த வழக்கை வாதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை 1995-ல் எனது கணவர் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1995-லிருந்து 2010-ம் வருடம் வரை வாதியாகிய எனது மாமனார் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனது மாமனாருக்கு அப்போது தெரியாது. 1998 முதல் 2010 வரையில் வாதி தாவா நிலத்தில் எந்த பயிரும் அறுவடை செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் செய்த நாளிலிருந்து இன்றுவரை பிரதிவாதி தான் பயிர் செய்து வருகிறார் என்றால் தகராறு ஏற்பட்ட பிறகு பிரதிவாதி பயிர் செய்து வருகிறார் என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதிக்கு தாவா சொத்தை எனது கணவர் விற்றபிறகு என்ன, ஏது சங்கதி என்று எனது கணவரை நான் கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பதிவு அவலுவகத்திற்கு எனது கணவரும், பிரதிவாதியும் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே இதுபோல் பிரதிவாதி ஒரு வழக்கை தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் தீர்ப்பு என்னவானது என்று எனக்கு தெரியும். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். தற்பொழுது அந்த வழக்கு வேலூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் பாளிகுப்பத்தில் உள்ளது. வழக்கு சொத்து இன்யை தேதி வரையில் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனது மாமனார் பெயரில் உள்ளது. பட்டா, அடங்கல், நிலவரி ரசீது ஆகியவை யார் பெயரில் உள்ளது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். பதிவு அலுவலகத்திற்கு வரும்போது எனது கணவர் நல்ல நிலைமையில் இருந்தார் என்றால் சரியல்ல. காரணத்தை கூறுங்கள் என்று கேட்டபோது அவர் தண்ணி போட்டிருந்தார் என்று சாட்சி கூறுகிறார்.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPAD I.